ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 10.3 – ஏத்துகின்றோம்


*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 10.3 – ஏத்துகின்றோம்

‡ ஏத்துகின்றோம் நாத் தழும்ப ⋆
இராமன் திருநாமம் ⋆
சோத்த நம்பீ ! சுக்கிரீவா ! ⋆
உம்மைத் தொழுகின்றோம் ⋆
வார்த்தை பேசீர் எம்மை ⋆
உங்கள் வானரம் கொல்லாமே ⋆
கூத்தர் போல ஆடுகின்றோம் ⋆
குழமணி தூரமே ‖ **10.3.1** ‖

எம்பிரானே ! என்னை ஆள்வாய் ⋆
என்றென்றலற்றாதே ⋆
அம்பின் வாய்ப்பட்டாற்றகில்லாது ⋆
இந்திரசித்தழிந்தான் ⋆
நம்பி அனுமா ! சுக்கிரீவா ! ⋆
அங்கதனே ! நளனே ⋆
கும்பகர்ணன் பட்டுப் போனான் ⋆
குழமணி தூரமே ‖ **10.3.2** ‖

ஞாலம் ஆளும் உங்கள் கோமான் ⋆
எங்கள் இராவணற்குக் ⋆
காலன் ஆகி வந்தவா ⋆
கண்டஞ்சிக் கரு முகில் போல் ⋆
நீலன் வாழ்க ! சுடேணன் வாழ்க ⋆

அங்கதன் வாழ்க என்று ⋆
கோலம் ஆக ஆடுகின்றோம் ⋆
குழமணி தூரமே ॥ **10.3.3** ॥

மணங்கள் நாறும் வார் குழலார் ⋆
மாதர்கள் ஆதரத்தை ⋆
புணர்ந்த சிந்தைப் புன்மையாளன் ⋆
பொன்ற வரி சிலையால் ⋆
கணங்கள் உண்ண வாளி ஆண்ட ⋆
காவலனுக்கிளையோன் ⋆
குணங்கள் பாடி ஆடுகின்றோம் ⋆
குழமணி தூரமே ॥ **10.3.4** ॥

வென்றி தந்தோம் மானம் வேண்டோம் ⋆
தானம் எமக்காக ⋆
இன்று தம்மின் எங்கள் வாணாள் ⋆
எம்பெருமான் தமர்காள் ⋆
நின்று காணீர் கண்கள் ஆர ⋆
நீர் எம்மைக் கொல்லாதே ⋆
குன்று போல ஆடுகின்றோம் ⋆
குழமணி தூரமே ॥ **10.3.5** ॥

கல்லின் முந்நீர் மாற்றி வந்து ⋆
காவல் கடந்து ⋆
இலங்கை அல்லல் செய்தான் உங்கள் கோமான் ⋆
எம்மை அமர்க்களத்து ⋆
வெல்லகில்லாதஞ்சினோம் காண் ⋆
வெங்கதிரோன் சிறுவா ⋆

கொல்ல வேண்டா ஆடுகின்றோம் ⋆
குழமணி தூரமே ‖ **10.3.6** ‖

மாற்றம் ஆவதித்தனையே ⋆
வம்மின் அரக்கர் உள்ளீர் ⋆
சீற்றம் நும் மேல் தீர வேண்டில் ⋆
சேவகம் பேசாதே ⋆
ஆற்றல் சான்ற தொல் பிறப்பில் ⋆
அனுமனை வாழ்க என்று ⋆
கூற்றம் அன்னார் காண ஆடீர் ⋆
குழமணி தூரமே ‖ **10.3.7** ‖

கவள யானை பாய் புரவித் ⋆
தேரோடரக்கர் எல்லாம் துவள ⋆
வென்ற வென்றியாளன் ⋆
தன் தமர் கொல்லாமே ⋆
தவள மாட நீடயோத்திக் ⋆
காவலன் தன் சிறுவன் ⋆
குவளை வண்ணன் காண ஆடீர் ⋆
குழமணி தூரமே ‖ **10.3.8** ‖

ஏடொத்தேந்தும் நீள் இலை வேல் ⋆
எங்கள் இராவணனார் ஓடிப் போனார் ⋆
நாங்கள் எய்த்தோம் ⋆
உய்வதோர் காரணத்தால் ⋆
சூடிப் போந்தோம் உங்கள் கோமான் ஆணை ⋆
தொடரேன்மின் ⋆

கூடிக் கூடி ஆடுகின்றோம் ⋆
குழமணி தூரமே ‖ **10.3.9** ‖

‡ வென்ற தொல் சீர்த் தென் இலங்கை ⋆
வெஞ்சமத்து ⋆
அன்றரக்கர் குன்ற மன்னார் ஆடி உய்ந்த ⋆
குழமணி தூரத்தை ⋆
கன்றி நெய்ந் நீர் நின்ற வேற்கைக் ⋆
கலியன் ஒலி மாலை ⋆
ஒன்றும் ஒன்றும் ஐந்தும் மூன்றும் ⋆
பாடி நின்றாடுமினே ‖ **10.3.10** ‖

அடிவரவு — ஏத்து எம்பிரானே ஞாலம் மணங்கள் வென்றி கல்லின் மாற்றம் கவளம் ஏடு வென்ற சந்தம்

ஏத்துகின்றோம் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்